# சட்டத்தின் ஆட்சியும் இல்லை! சட்டமன்ற மாண்பும் இல்லை!

வாய் இருக்கிறது என்பதற்காக "சாரி வேண்டாம், நீதி வேண்டும்" என்ற குரலுடன் திராவிட மாடல் ஆட்சியின்போது ஆர்ப்பாட்டம் நடத்தியவர் விஜய். சிவகங்கை மாவட்டத்தில் அஜித்குமார் என்ற இளைஞர் காவல் மரணத்திற்குள்ளான நிலையில், அப்போதைய முதலமைச்சரான நம் கழகத் தலைவர் அவர்கள், அஜித்குமார் குடும்பத்தினரைத் தொடர்புகொண்டு அவர்களிடம் தன் வருத்தத்தைத் தெரிவித்ததுடன், பொறுப்பு மிக்க முதலமைச்சராகத் தனது துறையில் நடந்த காவல் மரணம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு அனுமதித்து, அஜித்குமாரின் சகோதரருக்கு அரசுப் பணிக்கான ஆணையையும் வழங்கிடச் செய்தார். இதைத்தான், "சாரி வேண்டாம்.. நீதி வேண்டும்" என்று ஆர்ப்பாட்ட முழக்கமாக்கினார்கள் விஜய்யும் அவரது கட்சியினரும். இப்போது விஜய்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கிறார்.

**இரண்டு மாதங்களைக் கடந்துள்ள த.வெ.க ஆட்சியில், கடந்த 5 வாரங்களில் 4 காவல் மரணங்கள் நடந்துள்ளன. இதில் நாகர்கோவில் சபரிவர்மன், தூத்துக்குடி அருணாசலம் ஆகியோரின் காவல் மரணங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களின் குடும்பத்தினரும் பொதுமக்களும் சாலை மறியல் போராட்டம் நடத்தும் நிலை உருவானது. காவல்துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் விஜய். அவர், சாரியும் சொல்லவில்லை. நீதியும் வழங்கவில்லை. தனது ஆட்சியில் நடந்துள்ள மனித உரிமை மீறல் குறித்து வாயே திறக்கவில்லை.**

முதலமைச்சர் ஏன் வாய் திறக்க மறுக்கிறார் எனக் கேட்டு எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். முதலமைச்சர் விஜய்யும், அவரது அமைச்சரவையினரும் தலைமைச் செயலகத்திற்கு விடுமுறை கொடுத்துவிட்டு, 'ஜனநாயகன்' படம் ஓடும் திரையரங்குகளில் உட்கார்ந்திருந்தார்கள். காவல் மரணங்களுக்கு நீதி கிடைக்கவில்லை. தியேட்டர்களில் அமைச்சர்கள் கண்ணீர் விடும் 'ரீல்'கள்தான் தொலைக்காட்சிகளிலும் சமூக வலைதளங்களிலும் தென்பட்டன.

**சட்டத்தின் ஆட்சி என்பது எளிய மக்களுக்குப் பாதுகாப்பு அளித்து, சட்ட மீறல்களில் ஈடுபடும் அதிகாரவர்க்கத்தை அடக்கி வைப்பதாகும். மாறாக, த.வெ.க. ஆட்சியில் எளிய மக்களின் குரலாக ஒலிக்கின்றவர்களைப் பொய் வழக்குப் போட்டு ஒடுக்குகின்ற நடவடிக்கைகள் மட்டும்தான் மேற்கொள்ளப்படுகின்றன. சமூக வலைதளங்களில் உண்மையைப் பதிவிடுபவர்களை த.வெ.க.வின் இணைய அடியாள்படை மிரட்டுகிறது. ஆபாச வார்த்தைக களால் திட்டுகிறது. விஜய் கட்சியினரின் கேவலமான செயல்பாடுகளைப் புறந்தள்ளி சமூக அக்கறையுடன் மக்கள் பக்கம் நின்று உண்மையை உரக்கப் பேசுபவர்களையும், சமூக வலைதளங்களில் பதிவிடுகிற இளைஞர்களையும் கைது நடவடிக்கைகளால் முடக்கப் பார்க்கிறது விஜய் அரசு.**

ஊழலற்றஇலஞ்சம் வாங்காத ஆட்சி கொடுப்போம் என அடிக்கடி வாய் கிழியப் பேசுகிறார்கள் முதல்வர் விஜய்யும் அவரது கட்சியினரும். அவர்களின் சொல்லும் செயலும் நேர் எதிராக இருக்கின்றன என்பதற்கு சாட்சியமாக பழநி கோயிலுக்குச் சொந்தமான 100 கோடி மதிப்புள்ள சொத்தினை 2 கோடி ரூபாய்க்கு தனியாருக்குப் பத்திரப் பதிவு செய்த விவகாரம் சந்தி சிரிக்கிறது. பத்திரப்பதிவில் தவறு நடந்திருப்பதை த.வெ.க.வின் பத்திரப்பதிவுத் துறை அமைச்சரும், அறநிலையத்துறை அமைச்சரும் ஊடகங்கள் முன்பாகவே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மோசடி குறித்து சமூக வலைதளத்தில் விநோத் சூர்யா என்பவர் தன்னுடைய பதிவில், "அ.தி.மு.க. - தி.மு.க. ஆட்சிக் காலங்களில் நடந்தால் ஊழல். த.வெ.க ஆட்சியில் நடந்தால் அதற்குப் பெயர் தவறு" என்று பதிவிட்டிருந்தார். இந்தப் பதிவில் என்ன குற்றம் இருக்கிறது? ஆபாச வார்த்தைகள் கிடையாது. அடாவடிச் சொற்கள் கிடையாது. சமூக வலைதளங்களின் விதிமுறைகளுக்குட்பட்ட பதிவுதான் இது. இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள கருத்துரிமையின் அடிப்படையில் இந்த நாட்டின் குடிமகனாகப் பதிவு செய்த கருத்துக்கு விநோத் சூர்யா மீது வழக்குப் பதிவு செய்து, இரவோடு இரவாக அவரைக் கைது செய்து சிறைக்கு அனுப்பியது, 'ஜனநாயகன்' என வேடம் போடும் விஜய் அரசு.

இந்த அநீதியை எதிர்த்து தி.மு.க வழக்கறிஞர் சரவணன் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். விநோத் சூர்யாவுக்கு பிணை கேட்கும் மனுவும் தாக்கல் செய்யப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், "ஒருவர் வெளிப்படுத்தும் கருத்துகள் தொடர்பாக அவதூறு வழக்குதானே தொடர முடியும்? குற்ற நடவடிக்கை எடுக்கும் வழக்காகப் பதிவு செய்தது ஏன்?" என்று கேட்டது நீதிமன்றம். பிணை மனுவை விசாரித்த **முதன்மை செஷன்ஸ் நீதிமன்றம், "அரசையோ அமைச்சர்களையோ விமர்சிப்பது பொது அமைதிக்கு எதிரான குற்றமாகாது" என அழுத்தமாகச் சொல்லி, த.வெ.க. அரசின் காவல்துறை மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்து, விநோத் சூர்யாவை பிணையில் விடுவிக்க உத்தரவிட்டது.**

அரசை நோக்கிய விமர்சனங்களைவிட அரசுத் தரப்பில் உள்ளவர்களின் பேச்சுகள்



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

தான் மிகக் கடுமையானவையாகவும், காது கூசும்படியானதாகவும், வன்முறையைத் தூண்டும் வகையிலும் இருக்கின்றன. அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர்கள் த.வெ.க.வில் இணைந்த விழாவில் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, கரூரில் விஜய்யைப் பார்ப்பதற்காக கூட்ட நெரிசலில் 41 பேர் இறந்ததற்கு காவல்துறை மீது அபாண்டமாகக் குற்றம்சாட்டிப் பேசினார். அது மட்டுமின்றி, தி.மு.க. குறித்தும் கடுமையான விமர்சனங்களை வைத்தார்.

சி.பி.ஐ.யின் விசாரணையில் உள்ள வழக்கின் போக்கைத் திசை திருப்பும் வகையில் அமைச்சர் பொறுப்பில் இருப்பவரே அவதூறாகப் பேசுவது குறித்து தடை கோரி, தி.மு.க.வின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதி விஸ்வநாதன், "அவர்கள் பேசினால் நீங்களும் உங்கள் பேச்சால் எதிர்கொள்ளுங்கள்" என்று தெரிவித்தார்.

**கருத்துரிமை என்பது அனைவருக்கும் உரியது என்பதுதான் உச்சநீதிமன்றத்தின் கருத்து. த.வெ.க. அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவுக்குரிய அதே கருத்துரிமையின் அளவுகோல் தி.மு.க.வின் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனுக்கும் உண்டு.**

ஆனால், மார்க்கண்டேயன் அவர்கள் பேசியதற்காக அவரைக் கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறது த.வெ.க. அரசு. அப்படி என்ன அவதூறாகப் பேசிவிட்டார் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன்?

சட்டமன்றத்தில் ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்த முதலமைச்சர் விஜய், ஆதாரங்கள் எதுவுமின்றி எதிர்க்கட்சியின் மீது குற்றம்சாட்டியதையும், அதனை சபாநாயகர் அனுமதித்ததையும் கண்டித்து வெளிநடப்பு செய்தனர் தி.மு.க. உறுப்பினர்கள். இது குறித்து கரூரில் நடந்த த.வெ.க பொதுக்கூட்டத்தில் பேசிய விஜய், "நான் பேசும்போது கேட்காமல் எதிர்க்கட்சியினர் ஓடிவிட்டார்கள். சபாநாயகரிடம் சொல்லி சட்டமன்றக் கதவுகளைப் பூட்ட வேண்டும்" என்பதாகக் கூறினார். இதற்குப் பதில் தரும் வகையில் ஒரு கூட்டத்தில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், "சட்டமன்றக் கதவுகளைப் பூட்டினால் எலும்புகளை உடைத்து வெளியே வருவோம்" என்பதாகப் பேசினார்.

கரூரில் பேசிய விஜய், "இடைத்தேர்தலில் தி.மு.க.வை நங்கு..நங்கு..நங்கு என்று சம்மட்டியால் அடிக்கவேண்டும்" என்றும் பேசினார். இதில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மீது மட்டும் வன்முறையைத் தூண்டுவதாக வழக்குப் பதிவு செய்து, சிறையில் அடைப்பது எந்த வகையில் நியாயம்? சட்டமன்றத்தில் வெளிநடப்புச் செய்வது என்பது ஜனநாயக உரிமை. வெளியில் வந்து, ஊடகத்தினரிடம் தங்களின் கருத்துகளைத் தெரிவித்துவிட்டு, மீண்டும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் பங்கேற்பது சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் தொடர்ந்து நடைபெறும் ஜனநாயக நடைமுறையாகும்.

**சட்டமன்ற விதிகளைக் கூட அறியாத ஒருவர் முதலமைச்சரானது தமிழ்நாட்டின் அவலம். வெளிநடப்பு என்கிற நடைமுறையின் ஜனநாயகத் தன்மையை அறியாமல், "கதவுகளை பூட்டச் சொல்வேன்" என்று முதலமைச்சர் பேசுவது ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கின்ற கொடூர வார்த்தைகளாகும். குரல்வளை நெரிக்கப்படும் கொடூரத்தை எதிர்த்துப் பேசுவதற்குப் பெயர்தான் உரிமைக்குரல். தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் அத்தகைய குரலைத்தான் எழுப்பினார்.**

"கதவை மூடச் சொன்னதாக விஜய் பேசியது என்பது, அவரது பதிலை எதிர்க்கட்சிகள் கேட்க வேண்டும் என்ற அர்த்தத்தில்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, literalஆக கதவைப் பூட்டச் சொன்னார் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது" என சபாநாயகர் விளக்கம் கொடுத்திருக்கிறார். அப்படிப் பார்த்தால், எலும்புகள் உடையும் என்று சட்டமன்ற உறுப்பினர் சொன்ன வார்த்தைகளையும் literalஆக எடுத்துக் கொள்ளக்கூடாது அல்லவா? ஏன் இந்த இரட்டை அளவுகோல்?

"சட்டமன்றத்தில் சபாநாயகரிடம் அனுமதி கேட்டு சைகை செய்தார் முதலமைச்சர். எதிர்க்கட்சியினரும் சைகை செய்வதற்கு அனுமதிப்பீர்களாக?" என சபாநாயகரிடம் நிருபர்கள் கேட்டதற்கு, "அவர்கள் என்ன சைகை செய்யப் போகிறார்கள் என முன்கூட்டியே தெரிவித்தால் அதற்கேற்ப அனுமதி தருவேன்" என்று பதில் சொன்னார் சபாநாயகர். நிருபர்கள் தொடர்ந்து, "முதலமைச்சர் தனது சைகை பற்றி உங்களிடம் தெரிவித்தாரா?" எனக் கேட்க, "அவர் கை அசைவை வைத்தே அறிந்துகொண்டேன்" என்றார் சபாநாயகர். அடடா.. எப்படிப்பட்ட வார்த்தைகள்!

**ஆளுநர் உரை மீதான முதலமைச்சரின் பதிலுரையின்போது வெளிநடப்பு செய்தபின் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது, "சட்டமன்றத்திலேயே ஆக்‌ஷன் செய்கிறார் முதலமைச்சர். இங்கேயே நடிக்க ஆரம்பித்துவிட்டார். சட்டமன்றத்தை ஒரு ஷூட்டிங் ஸ்பாட்டாக மாற்றிவிட்டார்" என்று தெரிவித்தார். அதுதான் உண்மை என்பதுபோல, சட்டமன்றத்தில் செய்த சைகையைத் தனது 'ஜனநாயகன்' படத்தின் டைட்டில் கார்டாகச் சேர்த்து வெளியிட்டிருக்கிறார் விஜய். த.வெ.க.விடம் சட்டத்தின் ஆட்சியுமில்லை. சட்டமன்றத்திற்கான மாண்புமில்லை.**

## டெல்லியில் போராட்டம்:

# மாணவர்கள் மீது கொலை முயற்சி வழக்கு!

### காவல்துறை அராஜகம்!

புதுடெல்லி, ஜூலை 26 -

நீட் தேர்வுக்கு எதிராக டெல்லியில் போராடி வரும் மாணவர்கள் மீது கொலை முயற்சி உள்ளிட்ட 13 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

நீட் தேர்வு முறைகேடு மற்றும் தேர்வுத்தாள் கசிவு விவகாரத்தில் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்யக் கோரி மாணவர்கள் டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஜூலை 20 ம் தேதி அவர்கள் நாடாளுமன்ற முற்றுகைப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இந்நிலையில், போராட்டம் வன்முறையாக மாறியதாகக் கூறி, போராட்டம் நடத்தியவர்கள் மீது 15 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. கொலை முயற்சி, சட்ட விரோதமாகக் கூடுதல், பொது ஊழியர்களைப் பணி செய்யவிடாமல் தடுத்தல், அவர்கள் மீது தாக்குதல் நடத்துதல் மற்றும் பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல் உள்ளிட்ட 13 பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

காவல்துறை தங்களை மிகக் கொடூரமாகத் தடியடி நடத்தித் தாக்கியதாகவும், அமைதியான முறையில் நடந்த போராட்டத்தைக் கலைக்கவே இத்தகைய கடுமையான பிரிவுகளில் பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளதாகவும் மாணவர் அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

மாணவர்கள் மீதான வழக்குகளை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றுவரும் நிலையில், அவர்கள் மீது கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.




சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பாக வழக்கறிஞர்கள் டெல்லியில் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் வழக்கறிஞர் வாஞ்சிநாதன், மதுரை மாவட்ட வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகள் பாஸ்கரன், மோகன் குமார், ராஜமோகன், வீரபெருமாள் உள்ளிட்ட திரளான வழக்கறிஞர்கள் பங்கேற்று ஒன்றிய அரசை கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

## நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி

# 42 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!



கன்னியாகுமரி, ஜூலை 26-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி, 42 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், 42வது வட்ட கழக செயலாளருமான பிரபா ஜி.ராமகிருஷ்ணன் தலைமையில், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி செயலாளர் என்.பி.துரை ஆகியோர் முன்னிலையில் 23.07.2026, வியாழக்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் வேதநகர் பகுதியில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - வழக்கறிஞர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் பேசியதாவது, நாகர்கோவில் சிறைச்சாலையில் வைத்து விசாரணை கைதியான மாற்றுத்திறனாளி சபரி வர்மன் என்பவர் காவல் துறையினரால் தாக்கப்பட்டு இறந்து உள்ள நிலையில் மீண்டும் தூத்துக்குடியில் இது போன்று காவல் நிலையத்தில் விசாரணை கைதியாக இருந்த அருணாச்சலம் என்ற இளைஞரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

காவல் துறையினரை தன் வசம் வைத்திருக்கும் இந்த த.வெ.க. அரசின் முதலமைச்சர் இது தொடர்பாக பதில் ஏதும் தெரிவிக்காமல் தொடர்ந்து மௌனம் காத்து வருகிறார்.

மேலும் முதலமைச்சர் காலை உணவு திட்டம், நான் முதல்வன் திட்டம், முதல்வர் படைப்பகம் ஆகிய திட்டங்களை முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்ததினாலே திட்டத்தின் பெயர்களை மாற்றி வருகிறார்.

முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது பெயரினை எந்த திட்டங்களுக்கும் வைக்காமல், அனைத்து முதல்வர்களுக்கும் பொருந்தும் வகையில் பொதுவாக முதல்வர் என்ற வார்த்தையை பயன்படுத்தி வந்தார். ஆனால், நான் பிறந்த சொந்த ஊரான கல்லடிவிளை பகுதியில் என் தலைவனுக்கு பெருமை சேர்க்கும் வகையில், எவராலும் பெயரை மாற்றிடாதவாறு நமது கழகத் தலைவர் அவர்களின் பெயரில் மு.க.ஸ்டாலின் படைப்பகம் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் சிலையும் அமைத்து கழகத் தலைவர் தளபதியார் மு.க. ஸ்டாலின் அவர்களின்திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

தற்போதைய த.வெ.க. அரசானது புதிய திட்டங்களை கொண்டு வராமல் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த திட்டத்தின் பெயர்களை மாற்றி செயல்படுத்தி வருகின்றனர் என்று தெரிவித்தார்.

கூட்டத்தின் இறுதியில் வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது எனவும், கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

ஆலோசனைக் கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர் ஸ்டாலின் பிரகாஷ், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மால்டன், ரபீக், முகமது அலி, கழக நிர்வாகிகள் சேவியர், மிக்கேல், ஜெரால்டு, சவரி ஆனந்தம் உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.